பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
30 01 2026 FRIDAY 7 15 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சிலியுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. மேற்குவங்கத்தில் நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் பொதுநிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

3. எரிசக்தி துறையில் சீர்திருத்தங்கள் தொடரும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.

4. பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பல்வேறு அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

5. தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

இந்தியா - சிலி இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் விரைவில் இறுதி செய்யப்படும் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதுதொடர்பான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டினார்.

மின்னணு, சூரியசக்தி மின்உற்பத்தி மற்றும் மோட்டார் வாகன உற்பத்தி துறையில் ஏராளமான வாய்ப்புகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவிற்கு கிடைக்கும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இயற்கையை பராமரிப்பதில் *Mising* பழங்குடியினர் ஆற்றி வரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அஸ்ஸாமின் *Dhemaji* மாவட்டத்தில் *Mising* பழங்குடியினரின் இளையோர் திருவிழாவை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

வண்ணமிகு இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பது, தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த சமுதாயத்தினரின் வளர்ச்சிக்காக அஸ்ஸாம் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

200 தொடக்கப் பள்ளிகளில் *Mising* மொழியில் பாடங்கள் கற்பிக்கப்படுவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மாநாடு புதுதில்லியில் அடுத்த மாதம் 16ஆம் தேதி தொடங்கி 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் இதில் பங்கேற்கவுள்ளதாக தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>><<<<<<

எரிசக்தி துறையில் சீர்திருத்தங்கள் தொடரும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.

*கோவாவில் நடைபெற்ற இந்திய எரிசக்தி வார மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*சர்வதேச அளவில் கச்சா எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ள போதிலும், இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்களின் விலை கட்டுக்குள் இருந்ததாக அவர் தெரிவித்தார்.*

*மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு. ஹர்தீப்சிங் புரி கூறினார்.*

*>>>>>><<<<<<*

*சூடானில், வன்முறைச் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Mohielvin Salim Ahmed Ibrahim-முடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர், சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.*

*எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் டாக்டர் Shamika Ravi கூறியுள்ளார்.*

*சென்னையில் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகள் இருந்த போதிலும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளது என்று குறிப்பிட்டார்.*

*>>>>>><<<<<<*

*ககன்யான் தொடர்பான சோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் திரு. வி. நாராயணன் கூறியுள்ளார்.*

சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ர துணை முதலமைச்சர் அஜித் பவார், விமான விபத்தில் உயிரிழந்தது குறித்து அம்மாநில குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையை தொடங்கியுள்ளது.

புனே ஊரக காவல்துறை முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து, விசாரணையை தொடங்கியுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

மேற்குவங்க தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அனந்த்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் நேரிட்ட இந்த தீ விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

கேரள அரசின் நிதிநிலை அறிக்கை தொழில்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று அம்மாநில நிதியமைச்சர் திரு. பாலகோபால் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொழில்துறையின் வளர்ச்சிக்கான பல்வேறு அறிவிப்புகள் அதில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

மத்தியபிரதேசத்தில் ஒப்பந்த பணியாளர்கள், சிறப்பாக செயல்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

இன்று போபாலில் ஒப்பந்த தொழிலாளர்களின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அரசின் நலத்திட்ட உதவிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில், ஒப்பந்த தொழிலாளர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு சவாலான சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு இவர்கள் சிறப்பாக செயலாற்றி வருவதாக திரு. மோகன் யாதவ் கூறினார்.

>>>>>>><<<<<<

ஒடிசாவில் வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் புதிய திட்டத்தை அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக ஒடிசா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களில், மாற்றுப் பயிர் சாகுபடிக்கு ஊக்கமளிக்கும் அம்சங்களும் இதில் இடம் பெற்றிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

ராஜஸ்தானில் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்கள் மீது, அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா அறிவுறுத்தியுள்ளார்.

ஜெய்ப்பூரில் இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்டு பேசிய அவர், பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்கான அணுகுமுறைகளில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<

உத்தரபிரதேசத்தில் அரசு திட்டங்களின் செயலாக்கம் குறித்து, அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

லக்னோவில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில், திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றுமாறு முதலமைச்சர் அறிவுறுத்தியதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

பஞ்சாபில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு. கவ்ரவ் யாதவ் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், அமிர்தசரஸில் 51 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பாக கைது செய்யப்பட்ட இரண்டு பேரிடம் நடத்திய விசாரணையின் போது, அவர்களுக்கு பாகிஸ்தானுடன் தொடர்பு உள்ளது தெரியவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் திரு. கவ்ரவ் யாதவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பங்களாதேஷில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலின் போது, வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கக்கூடும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டில் வசிக்கும் அமெரிக்கர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, பங்களாதேஷில் உள்ள அமெரிக்கர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தல் அடுத்த மாதம் 12ஆம் தேதி நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பல்வேறு அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

பஞ்சாப் மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை சுட்டிக்காட்டி, சிறுபான்மை அமைப்பு ஒன்று இந்த குற்றச்சாட்டை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கிறிஸ்தவ தொழிலாளர்கள் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

>>>>>><<<<<<

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-19, 21-18 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Supanida Katethong-யை வென்றார்.

>>>>>><<<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Tanvi Khanna இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-9, 11-4, 11-7 என்ற செட்கணக்கில், ஹாங்காங்கின் Bobo Lam-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ் போட்டியின், 14 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில், இந்தியாவின் Jensi Kanabar பட்டம் வென்றார்.

*மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 3-6, 6-4, 6-1 என்ற செட்கணக்கில், ஆஸ்திரேலியாவின் Musemma Cilek-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*

*தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Sayali Wani காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-6, 10-12, 11-8, 11-9 என்ற செட்கணக்கில் சீனாவின் Yao Ruixuan-ஐ வென்றார்.*

*>>>>>><<<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat Singh, Veer Chotrani காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*புரோ ஹாக்கி லீக் போட்டிக்கான 33 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>>END<<<<<<*